# உரையாடல் - 1

**பங்குபெறுபவர்கள் :- ஆசிரியர், மாணவர்**

**ஆசிரியர்** : வணக்கம் மாணவர்களே!
**மாணவர்** : வணக்கம் அம்மா.
**ஆசிரியர்** : அனைவரும் வீட்டுப்பாடம் முடித்துவிட்டீர்களா?
**மாணவர்** : முடித்துவிட்டோம் அம்மா.
**ஆசிரியர்** : பாரதியார் பற்றி உங்களுக்கு தெரியுமா?
**மாணவர்** : தெரியும் அம்மா. நம் தேசியக் கவிஞர் பாரதியார்.
**ஆசிரியர்** : நன்று. பாரதியாரின் இயற்பெயர் என்ன?
**மாணவர்** : **சுப்பையா**.
**ஆசிரியர்** : நன்று. பாரதியாரின் ஊர் என்ன?
**மாணவர்** : **எட்டையாபுரம்**.
**ஆசிரியர்** : நன்று. பாரதியார் கவிதைகளில் ஏதேனும் இரண்டின் பெயரைக் கூறு?
**மாணவர்** : கண்ணன் பாட்டு, குயில் பாட்டு.
**ஆசிரியர்** : நன்று. பாரதியாரின் பெற்றோர் பெயர் என்ன?
**மாணவர்** : சின்னசாமி ஐயர், இலக்குமி அம்மாள்.
**ஆசிரியர்** : நன்று. பாரதியார் பிறந்த ஆண்டு என்ன?
**மாணவர்** : 1882.
**ஆசிரியர்** : பாரதியாருக்கு பிடித்த பணி என்ன?
**மாணவர்** : பத்திரிக்கையாளர்.
**ஆசிரியர்** : பாரதியாரின் மனைவி பெயர் என்ன?
**மாணவர்** : **செல்லம்மாள்**.
**ஆசிரியர்** : நன்று. பாரதியார் பாடல்களின் சிறப்பு?
**மாணவர்** : விடுதலை உணர்வை வெளிகாட்டும் வகையில் பாரதியார் பாடல்கள் உள்ளது.
**ஆசிரியர்** : நன்று. பாரதியார் எந்த ஆண்டு மறைந்தார்?
**மாணவர்** : 1921.
**ஆசிரியர்** : அனைவரும் நன்றாக பாரதியார் பற்றி அறிந்துள்ளீர்கள் நன்று. நாளை காமராஜர் பற்றி பார்ப்போம். நன்றி மாணவர்களே!
**மாணவர்** : நன்றி அம்மா.

www.kids.noolagam.com